**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.186/13

நாள்: 22.07.2025.

பெயர்: ராமச்சந்திரன் (வா.சா.1) த/பெ: ராமசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>2 முதல் 6 பிரதிவாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1. தாவா சொத்துக்கள் மொத்தம் 5 அயிட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எவ்வாறு எனது மாமா ராகவனுக்கு கிடைக்கப்பெற்றது என்றால் 2 கிரையப்பத்திரங்கள் மூலம் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு எனது மாமா பணம் எவ்வாறு கொடுத்தார் என்றால் அவர் பணம் கொடுக்கவில்லை. ஏனென்றால் மேற்படி கிரையங்கள் கொடுத்தவர் எனது மாமா ராகவனின் சின்ன மாமாவும் எனது சித்தப்பாவுமான ரங்கசாமி ஆவார். மேற்படி ரங்கசாமியை எனது மாமா ராகவன் பராமரித்து வந்ததால் கிரயம் எழுதி வைத்தார். மேற்படி விவரத்தை நான் எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் இல்லை. நான் எனது வழக்குரை மூன்றாம் பத்தியில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையுமான ராகவனுக்கு 14.10.2004 ல் சுயார்ஜிதமாக கிரயம் பெற்ற சொத்துக்களாகும் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா அய்யாறு படையாட்சிக்கு 6 பிள்ளைகள். அய்யாறு படையாட்சியின் பிள்ளைகள் 1. மகள் தனபால், 2. மகன் பெரியசாமி, 3. மகன் ராமசாமி, 4. மகன் ரங்கசாமி,5. மகள் அஞ்சலையம்மாள், 6. மகன் திருவேங்கடம். மேற்படி திருவேங்கடம் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். மேற்படி தனபாலை உட்கோட்டை கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்து அவருக்கு 2 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர், மகன்களில் மூத்தவர் ராகவன். ராகவன் தந்தை இறந்தபிறகு அவரை பெரியசாமி வளர்த்து வந்தார் என்றால் இல்லை, எனது தந்தை ராமசாமியிடம் தான் வளர்ந்து வந்தார்.

2. பெரியசாமியின் மனைவி பெயர் பச்சையம்மாள். பெரியசாமிக்கு ஒரே ஒரு வாரிசாக பெண் குழந்தையான காவேரி மட்டுமே என்றால் சரிதான். எனது தந்தைக்கு நான் மட்டும்தான் ஒரே வாரிசு. எனது அத்தை அஞ்சலையம்மாளை பெரியவளையத்தில் திருமணம் செய்து கொடுத்தனர். அஞ்சலையம்மாளுக்கு குழந்தைகள் இல்லை, அவர் விவாகரத்து பெற்று பின்பு அவர் பெரியசாமி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. அஞ்சலையம்மாளுக்கு விவாகரத்து பெற்றபோது பெரியசாமி உயிருடன் இல்லை பெரியசாமியின் மனைவி பச்சையம்மாளுடன் அஞ்சலையம்மாள் வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. பெரியசாமி இறந்தபிறகுதான் குடும்பத்தில் பாகபிரிவினை செய்துகொண்டனர். அந்த சமயத்தில் ராமசாமி, ரங்கசாமி, பெரியசாமியின் மனைவி பச்சையம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து பாகம் பிரித்து கொண்டனர். பாகம் பிரித்து கொண்ட பிறகு மேற்படி ராமசாமி, ரங்கசாமி, பச்சையம்மாள் ஆகியோர்கள் தனித்தனியே வசித்து வந்தனர் என்றால் சரிதான். மேற்படி பச்சையம்மாளுடன்தான் அஞ்சலையம்மாள் வாழ்ந்து வந்தார் என்றாலும் அப்போதுதான் 30.05.1980 தேதியன்று அஞ்சலையம்மாளுக்கு பச்சையம்மாள் ஒரு தான செட்டில்மெண்ட் எழுத முற்பட்டபோது உடன் உதவிக்கு வந்த ராமசாமி அந்த தான செட்டில்மெண்டில் அஞ்சலையம்மாள் பெயருடன் தனது பெயரையும் சேர்த்து எழுதிக்கொண்டார் என்றால் சரியல்ல.மேற்படி சொத்தை பச்சையம்மாள் மட்டும் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல, ராமசாமியும் சேர்ந்து தான் அனுபவித்து வந்தார். மேற்படி சொத்திற்கு அஞ்சலையம்மாள், ராமசாமி ஆகியோர் பெயர்களுக்கு தான செட்டில்மெண்ட் படி பட்டாவில் பெயர் மாறவில்லை என்றால் சரியல்ல. 10.05.2006 ல் அஞ்சலையம்மாள் இறந்ததிற்கு பின்பு நான் எனது பெயரில் எனது அம்மா அஞ்சம்மாள் பெயரிலும் தான செட்டில்மெண்ட் சொத்தின் பட்டாவை மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல, அஞ்சலையம்மாள் இறப்பதற்கு முன்பே எங்கள் பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது. தான செட்டில்மெண்டிற்கு பிறகுதான் பட்டா மாறியுள்ளது. பச்சையம்மாள் தன் மகள் காவேரியை ராகவனுக்கு திருமணம் செய்து

கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு பின்னிட்டு பச்சையம்மாள் அனுபவித்து வந்த தான செட்டில்மெண்ட் சொத்தை காவேரியும் ராகவனும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

3. தான செட்டில்மெண்ட் சொத்தை எனக்கு விட்டுக்கொடுக்கவில்லை என்பதால் எனக்கும் ராகவனுக்கும் பிரச்சனை இருந்துவருகிறது என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் சொத்தின் பட்டாவை 10.05.2006 தேதியில் எனது பெயருக்கு மாற்றப்பட்டதிலிருந்து எனக்கும் ராகவனுக்கும் பகை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 05.12.2011 அன்று தான செட்டில்மெண்ட் சொத்தில் நான் சவுக்கு மரம் நட சென்றபோது ராகவன் என்னை தடுத்ததால் அன்று முதல் எங்களுக்குள் பகை என்றால் சரியல்ல,அன்று நாங்கள் ஆர்.எஸ்.பதி மரம் நட்டோம் அப்போது ராகவனும் உடனிருந்து 6 அடிக்கு ஒரு மரக்கன்று வைத்தால் நன்றாக வளரும் என்று கூறினார். 05.12.2011 தேதியன்று எனக்கும் ராகவன் மீது இருந்த பகையின் காரணமாக அவரை வழிமறித்து தா.பழூர் சாலையில் உள்ள சூப்பர் கூல்டிரிங்ஸ் கடை எதிரே அவரை தலை,விலா ஆகிய இடங்களில் நான் அரிவாளால் வெட்டி காயம் ஏற்படுத்தியதால் அவர் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்து சிகிச்சை பலனின்றி 24.12.2011 அன்று இறந்துவிட்டார் என்றால் அவர் 24.12.2011 அன்று இறந்தார் ஆனால் அதற்கு மேற்கூறிய காரணம் சரியல்ல. ராகவன் கொடுத்த வாக்குமூலத்தின் பெயரில்தான் என் மீது ஜெயங்கொண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது ஊர் முக்கியஸ்தர்களை அழைத்து கொலை வழக்கில் ராசியாக போக வேண்டி ராகவன் குடும்பத்தினரிடம் நாங்கள் கேட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி ஊர் முக்கியஸ்தர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தும்போது பிரச்சனைக்கு காரணமான செட்டில்மெண்ட் சொத்தை காவேரி குடும்பத்திற்கு எழுதி கொடுக்க சொன்னதன் பெயரில் காவேரியின் முதல் மகன் அருள்முருகனுக்கு எழுதி கொடுத்து விட்டு ராசியாக போய்விட்டோம் என்றால் சரியல்ல. நான் அருள்முருகனுக்கு பணத்திற்காகதான் கிரயம்

கொடுத்தேன்.மேற்படி ஊர் முக்கியஸ்தர்கள் பேச்சுவார்த்தையில் கூறியபடி ராகவன் குடும்பத்தினர் எவரும் எனக்கு எதிராக கொலை வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் சாட்சியம் அளித்தார்களா இல்லையா என்பது எனக்கு நியாபகம் இல்லை. அந்த வழக்கில் எனக்கு தண்டனை அளிக்கப்படவில்லை. காவேரி குடும்பத்தினரோ மற்ற சாட்சியோ எனக்கு எதிராக சாட்சியம் அளிக்காததால் தான் அந்த வழக்கில் நான் விடுதலை செய்யப்பட்டேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு எழுதி வைக்கப்பட்ட உயிலின் தேதி 13.06.2011 அந்த உயிலில் அவருக்கு உடல்நிலை நோய்வாய் ஏற்பட்டு படுத்த படுக்கையாக இருந்து மிகவும் சிரமப்பட்டு வருகிறேன் என்று உள்ளதில் அந்த சமயத்தில் அவர் எங்கு இருந்தார் என்றால் எனது கொல்லையில் உள்ள கொட்டகையில் இருந்தார். அந்த சமயத்தில் அவருக்கு 3 வேளையும் சாப்பாடு நான் தான் கொடுத்தேன். ராகவனின் மனைவி மற்றும் பிள்ளைகளிடம் அவரை ஏன் பார்த்துக்கொள்ள மறுக்கிறீர்கள் என்று கேட்டேனா என்றால் நான் அவர் மனைவி காவேரியிடம் மட்டும் கேட்டேன். அவருடைய பிள்ளைகளிடம் கேட்கவில்லை. ராகவனுக்கு நான் பணம் செலவு செய்து வைத்தியம் பார்த்தேனா என்றால் அரசு மருத்துவமனையில் வைத்தியம் பார்த்தேன். பணம் செலவு செய்யவில்லை. நான் அவரை பராமரித்த போது மருத்துவர் கொடுத்த மருந்து சீட்டுகளையோ மருத்துவ ஆவணங்களையோ நான் வாங்கி வைத்துகொண்டேனா என்றால் இல்லை. அது அவரிருந்த கொட்டகையில் வைக்கப்பட்டிருந்தது. ராகவனுக்கு எந்தவித நோயும் இல்லை அவர் நன்றாகதான் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் தனது மனைவி மக்களுடன் சந்தோஷமாகதான் வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. ராகவன் எனக்கு உயிலில் கொடுத்த சொத்துக்கள் யாவும் அவர் குடும்பத்தினரோடு சேர்ந்து உழைத்து வாங்கிய கூட்டுகுடும்ப சொத்து என்றால் சரியல்ல.

5. உயில் எழுதிய விவரம் உயில் எழுதிய அன்றே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. உயில் எங்கு எழுதப்பட்டது என்றால் பஸ்டாண்ட் ரோட்டில்

சி.எஸ்.எஸ் கம்யூட்டர் செண்டரில் எழுதப்பட்டது. உயிலின் வாசகங்களை ராகவனும், வழக்கறிஞர் வீராசாமியும் சொன்னதின் பெயரில் எழுதப்பட்டது. உயிலின் சாட்சிகளான் கொளஞ்சி, மோகன் ஆகியோர் கரடிகுளம் கிராமத்தை சார்ந்தவர்கள். மேற்படி கொளஞ்சி, மோகன் ஆகியோர் எனக்கு நண்பர்கள் என்றால் சரியல்ல. அவர் எனது ஊர்காரர்கள்.

6. வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்து ராகவனுடையது இல்லை என்றாலும் அது அவருடைய கிரயப்பத்திரத்தை நகல் எடுத்து அதில் உள்ளது போல் நானே போட்டது என்றாலும் சரியல்ல. 14.10.2004 தேதியிட்ட ராகவன் ரங்கசாமியிடம் பெற்ற கிரயப்பத்திரத்தின் நகலில் நான் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. மேற்படி 14.10.2004 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் உள்ள கையெழுத்துதான் ராகவனின் உண்மையான கையெழுத்து என்றும் உயிலில் உள்ளது நானே போட்டது என்றாலும் சரியல்ல. எனக்கும் ராகவனுக்கும் எப்போதும் பகைதான் அதனால் அவர் எனக்கு வா.சா.ஆ.2 உயிலை எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 உயிலில் சாட்சிகள் பயன்படுத்திய பேனாவும் ராகவன் பயன்படுத்திய பேனாவும் ஒன்றுதான் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. வா.சா.ஆ.2 எழுதியபோது யாரெல்லாம் உடனிருந்தனர் என்றால் எனது மாமா ராகவன், வழக்கறிஞர் வீராசாமி, 2 சாட்சிகள், கணிணி தட்டச்சு செய்தவர் மற்றும் நான் ஆக மொத்தம் 6 பேர் இருந்தோம். வா.சா.ஆ.2 உயில் எழுதியதை பற்றி ராகவனின் மனைவிக்கோ பிள்ளைகளுக்கோ நான் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

7. பெற்றோர்களை பார்த்துக்கொள்வதில் அவர்களது பிள்ளைகளின் கடமை என்பதால் ராகவனை அவரது பிள்ளைகள் பார்த்துக்கொள்ளாதது பற்றி நான் RDO விடமோ நீதிமன்றத்திலோ மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 உயிலுடன் ராகவனுடைய நிலத்திற்கான பட்டா நகலில் அவர் கையெழுத்து போட்டு அந்த உயிலுடன் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதரவுகளின் படி

எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

8. நானும் எனது நண்பர்களும் சேர்ந்துகொண்டு வா.சா.ஆ.2 உயிலை இந்த வழக்கிற்காக பொய்யாக ஜோடித்துகொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டுமென்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை அபகரிக்கும் எண்ணத்தில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.